<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 08.07.2025

**அசல் வழக்கு எண்.2/2024**

**வா.சா.**1 **- அன்பரசு , த/பெ.கோவிந்தசாமி.**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

என்ன வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் பாகம் பிரித்து தர வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன படித்து உள்ளீர்கள் என்றால் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீங்கள் உங்கள் வீட்டில் மூத்த பிள்ளையா என்றால் எனக்கு அக்கா ஒருவர் இருக்கிறார். நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் நான் கொத்தனார் வேலை செய்கிறேன். எவ்வளவு சம்பளம் என்றால் தினமும் வேலைக்கு சென்றால் ஆயிரம் கிடைக்கும். எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் திருமணம் நடைபெற்று **20** ஆண்டுகள் ஆகிறது. உங்கள் வீட்டிலேயே உங்களுக்கு திருமணம் செய்து வைத்தார்களா என்றால் நானாகவே காதல் திருமணம் செய்து கொண்டேன். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் எனக்கு பிள்ளைகள் யாரும் இல்லை. எங்கு குடியிருக்கிறீர்கள் என்றால் மேலாண்டை தெருவில் குடியிருந்து வருகிறேன். நீங்கள் தற்பொழுது குடியிருப்பது உங்கள் பெரியம்மாவுக்கு சொந்தமான இடம் என்று சொன்னால் சரிதான். ஏ செட்யூல் முதல் அயிட்ட சொத்து உங்களுக்கு எப்படி வந்தது என்றால் என் அப்பா சம்பாதித்தது என் அப்பா அம்மா பெயரில் கிரயம் வாங்கப்பட்டது. உங்கள் அப்பாவும் அம்மாவும் சேர்ந்து வாங்கியதால் ஆளுக்கு பாதி பாகம் உண்டு என்று சொன்னால் சரிதான். உங்கள் அப்பாவின் அப்பா அவருடைய பெயர் என்ன என்றால் மாணிக்க நாயக்கர் ஆகும். அதாவது உங்கள் தாத்தா மாணிக்க நாயக்கர் ஏதேனும் சொத்து வைத்து விட்டு சென்றார்களா என்றால் வைத்து விட்டு சென்றார்கள் அதனை அகிலாண்டேஸ்வரி முதல் பிரதிவாதி விற்று சாப்பிட்டு விட்டார். எவ்வளவு சொத்து சர்வே நம்பர் பரப்பு தெரியுமா என்றால் பிள்ளை பாக்கம் திருப்பெரும்புதூர் தாலுக்காவில் இருந்தது. வீட்டுமனை **22 X 22** இருந்தது அதனை தான் விற்று சாப்பிட்டு விட்டார். அவ்வாறு இருந்ததற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்து கொண்டீர்களா என்றார் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு உங்கள் தாத்தா எந்த சொத்தும் வைத்து விட்டு போகவில்லை அதனை யாரும் விற்று சாப்பிடவில்லை நீங்கள் வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை.

ஏ செட்யூல் சொத்தில் முதல் அயிட்ட சொத்து எந்த ஆண்டு வாங்கப்பட்டது என்றால் **1988** ஆம் ஆண்டு வாங்கப்பட்டது. அப்பொழுது தங்களுக்கு என்ன வயது என்றால் எனக்கு **8** வயது ஆகும். ஏ ஷெடுயூள் சொத்தில் இரண்டு மற்றும் மூன்றாவது ஐட்ட சொத்துக்கள் யார் வாங்கியது எப்பொழுது வாங்கியது தெரியுமா என்றால் பாட்டி ரங்கநாயகி, அகிலாண்டேஸ்வரி கோவிந்தசாமிக்கு எழுதி வைத்தார்கள். கோவிந்தசாமி என்னுடைய அப்பா ஆவார். எப்படி எழுதினார்கள் கிரயமாக எழுதினார்களா உயிலாக எழுதினார்களா என்றால் உயிலாக எழுதி வைத்தார்கள். எப்பொழுது எழுதினார்கள் தெரியுமா என்றால் தெரியாது. **02.03.1988** ஆம் ஆண்டு அந்த உயில் எழுதப்பட்டது என்று சொன்னால் உங்களால் மறுக்க முடியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் உள்ள பி ஷெட்யூல் சொத்தானது உங்களுடைய பாட்டி ரங்கநாயகி உங்கள் தாயார் அகிலாண்டேஸ்வரிக்கு மேற்படி உயில் மூலமாக உங்கள் தாயார் அகிலாண்டேஸ்வரிக்கு மேற்படி உயில் மூலமாக எழுதி வைத்தார்கள் என்றால் சரியில்லை. உங்களுடைய பாட்டி ரங்கநாயகி உங்கள் அப்பா அம்மா இருவருக்கும் உயில் எழுதி வைத்ததாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியில்லை. பாட்டி ரங்கநாயகி முதல் பிரதிவாதி அகிலாண்டேஸ்வரிக்கு உயில் வாயிலாக சொத்து எழுதியதால் அது அவரது தனிப்பட்ட சொத்து அதில் நீங்கள் பாகம்கோர முடியாது என்று சொன்னால் சரியில்லை. அகிலாண்டேஸ்வரிக்கு கிடைத்த சொத்து தனிப்பட்ட சொத்து அவர் யாருக்கு வேண்டுமானாலும் அதனை எழுதி வைக்கலாம் உங்களுக்கு கேட்க எந்த அதிகாரமும் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. ஏ ஷெட்யூல் சொத்தில் முதல் ஐட்ட சொத்தை விற்பதற்கு உங்கள் அம்மா உங்களை அழைத்தார்களா என்றால் அழைக்கவில்லை. நீங்கள் வழக்குக்காக பொய் சொல்கிறீர்கள் ஊரார் மத்தியில் பஞ்சாயத்து வைத்து உங்களுடைய பாகத்தை உங்களுக்கு கொடுக்க உங்களை அழைத்தார்கள் நீங்கள் தான் வரவில்லை என்று சொன்னால் சரி இல்லை. நீங்கள் வராத காரணத்தினால் நாலில் ஒரு பாகமான ஆறு சென்டை யாருக்கும் விற்காமல் உங்களுக்காக ஒதுக்கி வைத்துவிட்டு மீதி இருந்த சொத்தை தான் விற்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரி இல்லை. உங்களுக்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய ஆறு சென்ட் நிலம் அங்கே தான் உள்ளது நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்றால் சரி இல்லை. உங்கள் அம்மாவிற்கு செலவிற்கு பணம் கொடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால் மருத்துவமனை செலவிற்கு பணம்

கொடுத்துள்ளேன் என்ன மருத்துவமனை செலவு என்று சொன்னால் காலில் விபத்தில் காயம் ஏற்பட்டது அதற்காக சிகிச்சைக்காக பணம் கொடுத்து உதவினேன். என்னுடைய வீட்டிலேயே தான் சிகிச்சை பார்த்தேன். அவருக்கு காயம் ஏற்பட்ட பொழுது அரசு மருத்துவமனையில் காப்பீட்டு மூலம் தான் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். இழப்பீடு கோரி தனிப்பட்ட வகையில் விபத்து வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரிதான். எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் தெரியாது. உங்கள் அம்மாவிற்கு விபத்தில் காயம்பட்டவுடன் எதிர் தரப்பினரிடம் சமாதானம் பேசி எதிர் தரப்பினரிடம் இருந்து பணத்தை வாங்கி சென்றுவிட்டீர்கள் எப்.ஐ.ஆர் போடவிடவில்லை என்றால் சரியல்ல. மாத செலவிற்கு எவ்வளவு கொடுப்பீர்கள் என்றால் **500** ரூபாய் கொடுக்கவில்லை ஆயிரம் ரூபாய் கொடுப்போன். சொத்து கேட்டு உங்கள் அம்மாவை அடிக்கும் பழக்கம் உங்களுக்கு உள்ளது என்றால் சரி இல்லை. போன ஆண்டு நீங்கள் உங்கள் அம்மாவை கண்ணில் குத்தியதால் மண்டையில் அடிபட்டு கை முறிந்து அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள் என்றால் சரியில்லை. சுமார் ஒன்றரை மாதங்கள் சிகிச்சை பெற்று உயிருக்கு போராடி டிஸ்சார்ஜ் ஆகி வந்தார் என்று சொன்னால் சரி இல்லை. நீங்கள் உங்கள் அம்மாவை அடித்து விட்டதால் உங்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பட்டு உங்களை கைது செய்து அதன் பிறகு பிணையில் வந்துள்ளீர்கள் என்றால் சரியில்லை. அந்த முதல் தகவல் அறிக்கை குற்ற எண் **462/2024** வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரி இல்லை. கடந்த மூன்று மாதங்களுக்கு முன் உங்கள் அம்மாவை நீங்கள் தாக்கி விட்டீர்கள் ஆகவே உங்கள் அம்மா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார் ஏற்கனவே உன் மீது தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நிலுவையிலுள்ள போது அடிக்கடி வழக்கு தாக்கல் செய்வது சரியில்லை என்று உங்களை எச்சரிக்கை செய்து அனுப்பி விட்டார்கள் என்றால் சரியில்லை. நீங்கள் கோரிய பாகப்பிரிவினை பரிகாரம் உங்களுக்கு வழங்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியில்லை. ஏ ஷெடியூல் சொத்தில் முதல் ஐட்ட சொத்தில் நான்கில் ஒரு பாகமான ஆறு சென்டு நிலம் உங்களுக்காக அங்கேயே ஒதுக்கி விடப்பட்டுள்ளது அதை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் என்றால் சரியில்லை. நீங்கள் கோரிய பரிகாரமான கிரைய ஆவணங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் அவர்களுக்கு

சொந்தமான நிலத்தைதான் அவர்கள் விட்டார்கள் ஆகவே அந்த பரிகாரங்கள் உங்களுக்கு வழங்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரி இல்லை. ஐந்தாவது பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் உங்களுக்கு வழங்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரி இல்லை. ஆகவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.